மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2022 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண்.80/2018
--------

1.திரு.கே.வித்யாசங்கர்,
2.திரு.கே.ஜி.வெங்கட்ராமன்,
3.திரு.கே.எஸ்.கணேஷ்,
4.திரு.கே.ஆர்.ஸ்ரீ ராம். .. வாதிகள்

/எதிர்/

1.திரு.கே.சி.கிருஷ்ணன்,
2.திரு.என்.சௌந்தராஜன்,
3.திரு.ஏ.பாலமுருகன்,
4.திரு.டி.சௌந்தராஜன்,
5.1 நிர் இணை சார்பதிவாளர், பழனி.
6.திரு.கே.ஆர்.சுந்தரம்,
7.திரு.முனீஸ்வரன்,
8.திரு.சி.ராமசுந்தரம். .. பிரதிவாதிகள்

(இ.ம.எண்.926/2018 ல் கடந்த 26.08.2019 ம் தேதிய உத்தரவின்படி 7 ம் பிரதிவாதியும், இ.ம.எண்.165/2019 ல் கடந்த 26.08.2019 ம் தேதிய உத்தரவின்படி 8 ம் பிரதிவாதியும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு இ.ம.எண்.3/2019 ல் கடந்த 19.11.2019 ம் தேதிய உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சந்திரமோகன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.பசீர் அகமது அவர்கள் முன்னிலையாகியும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.வி.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 4 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெ.உமர்கயான் அவர்கள் முன்னிலையாகியும், 5 ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 6 ம் பிரதிவாதி இவ்வழக்கிலிருந்து நீக்கறவு செய்யப்பட்டும், 7 ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், 8 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஜி.சபிதா அவர்கள் முன்னிலையாகியும், தாவா பிராதை

திருத்தம் செய்யவேண்டிய நிலையில், பிராதை திருத்தம் செய்வதற்கு ஏற்கனவே வாதிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்றும் பிராதை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யாததால், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

கடந்த 20.11.2017 ம் தேதியன்று பழனி 1நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2436/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய உடன்படிக்கை பத்திரம் செல்லாது, அது வாதிகளை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்யும்படி கோரியும், 1 முதல் 4 பிரதிவாதிகளோ, அவர்களது முகவர்களோ தாவா சொத்தை பொறுத்து எவ்வித பந்தக பராதீனம் செய்யவோ, வில்லங்கங்களுக்கு உட்படுத்தவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கும்படி கோரியும், தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிகளுக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிராதை திருத்தம் செய்வதற்கு ஏற்கனவே வாதிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்றும் பிராதை திருத்தம் வாதிகள் தரப்பில் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை. எனவே, இவ்வழக்கானது வாதிகளின் தவறுகைக்காக பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 16.08.2022 ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)என்.ஞானசம்பந்தம்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
பழனி.